ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/45 - 2025 ඔක්තෝබර් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.16

*2458/45 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**கேகாலை மாநகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தினை அங்கீகரித்தல்**

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க ஆகிய எனக்கு, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினது பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர், கேகாலை மா நகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

**அனுர கருணாதிலக்க** (பா.உ.),
நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய" கட்டம் - 11,
பத்தரமுல்லை.
2025, ஒற்றோபர் 09.

EOG 10-0170/1

## கேகாலை மாநகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அங்கீகாரம்

1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(A)பிரிவிற்கு அமைய ஒழுங்கு செய்யப்பட்ட, கேகாலை மாநகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க ஆகியநான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய, அனுமதி வழங்கினேன் என்பதை, குறிப்பிட்ட சட்டத்தின் 8(G) பிரிவின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

**அனுர கருணாதிலக்க** (பா.உ.),
நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய" கட்டம் - II,
பத்தரமுல்லை.
2025, ஒற்றோபர் 14.

EOG 10-0170/2

---

## கேகாலை மாநகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கு அங்கீகாரம்

1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8(A)பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க, கேகாலை மாநகர சபை அதிகார பிரதேசம் மற்றும் கேகாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தி திட்டத்திற்கு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ அனுர கருணாதிலக்க அவர்களினால், குறித்த சட்டத்தின் 8(F) பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

**பொறி. எல். பி. குமுதுலால்**,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை.

2025, ஒற்றோபர் 14.

EOG 10-0170/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.